# ரஷ்யாவில் அரசியல்கொந்தளிப்பு; சிவில்யுத்தம் வெடிக்கலாம்!


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 9 இதழ் 220
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25—9—1993


(மாஸ்கோ)

ரஷ்யாவில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு நாளடைவில் பெரும் சிவில் யுத்தமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய நாடாளுமன்றத்தை இராணுவம் தற்போது சுற்றி வளைத்துள்ளது. நாடாளுமன்றத்தின் உள் இருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பொரிஸ் ஜெல்ஸின் உத்தரவிட்டுள்ளார்.

(8-ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு போராளிகள் நீரருந்தாது உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நேற்று முதல் ஏழு போராளிகள் 26ந் திகதி வரை நீரருந்தாது உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

போராளிகளான சாகி, அருவி, இன்தமிழன், மரச்செல்வம், பீற்றர், அன்பரசன், அலை ஆகியோரே நேற்று முதல் நீரருந்தாது உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர்.

(3-ஆம் பக்கம் பார்க்க)

புலிகளை ஒடுக்க உதவி பெறவிரும்பினாலும்

# இஸ்ரேலுடன் மீண்டும் உறவை ஏற்படுத்த அரசு பெரும் தயக்கம்

## அரபு நாடுகளின் வருமானம் பறிபோகுமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை ஒடுக்க இஸ்ரேலின் உதவியைப்பெற விரும்பிய போதிலும் இஸ்ரேலுடன் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை அரசு தயக்கம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேலுடன் உறவு கொள்வதால் அரபு நாடுகளிலிருந்து கிடைத்துவரும் கோடிக்கணக்கான வெளிநாட்டு செலாவணியை இழக்க நேரிடுமே என்ற அச்சத்தின் காரணமாகவே அரசு இந்த விடயத்தில் தயக்கம் காட்டிவருகிறதாம்!

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகி பலஸ்தீன நாடுகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னும் இலங்கை அரசு இஸ்ரேல் விடயத்தில் தொடர்ந்தும் மெளனம் சாதித்தே வருகின்றது.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பிறகு அதனை ஏற்றுவிருக்கும் விளைவுகளை இலங்கை உன்னிப்பாக அவதானித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்...

(8-ம் பக்கம் பார்க்க)

## வாந்திபேதி நோய் நாளுக்கு நாள் அதிகரிப்பு
### நேற்று 14 பேருக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி நோயின் தீவிரம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருவதை யாழ்: ஆஸ்பத்திரி பதிவேடுகளிலிருந்து தெரியவருகிறது.

யாழ் ஆஸ்பத்திரியில் நேற்றும் இந்நோயினால் பீடிக்கப்பட்டு 14 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனுமதிக்கப்பட்டவர்களின் படி கைதடியிலும், நாவாந்துறையிலும் மிகத் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரியவருகிறது.

கைதடியிலிருந்து ஏழுபேரும் நாவாந்துறையிலிருந்து மூவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## விடுமுறை தினம்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவு தினத்தையொட்டி நாளை 26ம் திகதி தமிழ்த்தேசிய தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு, எழுச்சி நாளாக அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம்பிடித்த 13 தமிழரின் எலும்புகூடுகள் கண்டுபிடிப்பு

(மட்டுநகர்)

கடந்த மார்ச் மாதம் மட்டு நவிண்டியாமடு பகுதியில் இராணுவத்தால் பிடித்து செல்லப்பட்ட காணாமல் போனதாக கருதப்பட்ட 13 தமிழ் விவசாயிகளின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அன்னையின் விறகு எடுக்கச் சென்ற இருபொது மக்களை மட்டு கித்துள் கிடாரம் கோட்ட மடுப்பகுதியில் வைத்து கைது செய்த இராணுவத்தினர் 13 எலும்புக் கூடுகளைக் காட்டி அச்சுறுத்தினராம்.

மேற்குறிப்பிட்ட 13 விவசாயிகளினது எலும்புக் கூடுகளே இவ்வாறு காண்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 13 பேரும் காணாமல்...

(8-ம் பக்கம் பார்க்க)


இரதோற்சவ சிறப்புமலர் உள்ளே

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான இரதோற்சவ சிறப்பு மலர்

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான இரதோற்சவ சிறப்பு மலர்


## தியாகி திலீபன் 6-ம் ஆண்டு நினைவு பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

செப். 15ம் திகதியிலிருந்து 25ம் திகதிவரை வட்ட ரீதியாக நடைபெற்று வந்த தியாகி திலீபனின் 6ம் ஆண்டு இறுதிநாள் அடையாள உண்ணாவிரதங்கள்- கோட்ட ரீதியாக நடைபெற்று, நினைவுப் பொதுக் கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன.

வலிகாமம் தீவக கோட்டம்/ கடற்புலிகள் இணைந்த உண்ணாவிரதமும், பொதுக் கூட்டமும் நல்லூர் கந்தசாமிகோவில் முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் நுணாவில் மணன்குளம் பிள்ளையார் கோவில் முன்றலிலும், வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் மாலுசந்தி பிள்ளையார் கோவில் முன்றலிலும் நடைபெறவிருக்கின்றன.

கோட்ட ரீதியாக நடை...

(8-ம் பக்கம் பார்க்க)

## வாகன கொள்வனவு பற்றி அரசுக்கு அறிவிக்க உத்தரவு

(கொழும்பு)

வாகனங்களைக் கொள்வனவு செய்வோரும் அவை பற்றிய சகல விபரங்களையும் அரசுக்கு இனிமேல் உடனடியாக அறிவிக்க வேண்டும். இதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது.

இதன்படி மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தில்...

(8ம் பக்கம் பார்க்க)

## போரைமுடிவுக்குகொண்டுவர இராணுவம் விரும்புகிறதாம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவே இராணுவம் விரும்புகிறது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆனந்தாகல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

வடக்கு கிழக்கு யுத்தத்தை இராணுவத்தளபதிகளும் இலங்கை அரசியல் வாதிகளும் வேண்டுமென்றே நீடித்து வருகின்றார்கள் என்று குற்றம் சாட்டுவது...

(8-ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளம் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

மன்னார் செட்டிக்குளத்திலிருந்து இடம் பெயர்ந்து மாதிருகாமில் தங்கியுள்ள தமிழ் மக்கள் நேற்று முன்தினம் மூன்றாவது தடவையாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த மக்களுக்குரிய உலர் உணவு நிவாரண உதவி நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டித்தே யு. என். எச். ஆர். அலுவலகம், மற்றும் மடு உ. அ. அதிபர் அலுவலகம் ஆகிய...

(8-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### ஆங்கில வைத்திய சேவை

ஆண், பெண், குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல்கள், வாதங்கள், வயிற்று நோய்கள், வாய்ப்புண், தோல்புரை நோய்கள், மாதவிடாய் பிரச்சனைகள், இருமல், மூல வியாதி, வீரியக்குறைவு, மற்றும் பல குணப்படாத நோய்கள் குணப்படுத்தப்படும். இளைப்பாறிய வைத்தியக் கலாநிதி த. விஸ்வநாதன் M. R. S. H. (லண்டன்) டொக்டர் பதிவு இல: 529, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குச் சமீபமாக) சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். (கி-462)

### பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல்

1991ம், 1992ம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல் "சுமைகள்" விற்பனையாகின்றது. பூபாலசிங்கம், ஸ்ரீகாந்தமலர், புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். கி-480

### வியாபாரிகளுக்கு

நூல், லேஸ், சில்க், சோக்ஸ், கவறிங் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். (எ-3400)

### UNIVERSITY OF JAFFNA
### SRI LANKA

**EXTERNAL REGISTRATION 1992/93**

Admission and Welcome of Freshers and Sophomore (External Student) 1992/93

Admission and welcome of external students will take place under the patronage of the Vice-Chancellor in Kailasapathy Auditorium on Saturday 02 October 1993 at 2-00 p. m.

Please be present.

REGISTRAR
University of Jaffna.
(A 3443)

### பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் கொத்தணிகளினதும் அங்கத்தவர்களுக்கும் பணியாளர்களுக்குமான

## அறிவித்தல்

தியாகச் செம்மல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவையொட்டி நடைபெறவுள்ள இறுதி நாள் (26-09-93) உண்ணாநோன்பில் முழுமையாகப் பங்கு கொண்டு மகத்துவம் மிக்க இந்நோன்பை சிறப்பாக அனுஷ்டிக்கும் வண்ணம் இத்துறை சார்ந்த அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்றைய தினம் கிளைகளின் வியாபார நடவடிக்கைகள் முற்றாகத் [illegible]த்துக்கொள்ளவும் உற்பத்திப் பொருள் கொள்வனவு மட்டும் அனுமதிக்கப்படுகிறது.

தலைவர்
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்
(ஏ3451-)


## WANTED

A Journalist with Competency in English Language along with Experience. Apply with details before 30-9-93.

**Advt. No: 3445**
**C/o Eelanadu Ltd,**
**Jaffna.**

(ஏ-3445)


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


வன்னியில் தேரேறி காட்சிதரும்
மாயக்கண்ணனே... பரந்தாமா!!
கருணைமழை பொழிந்திடுவாய் பெருமானே

வளரும் குழந்தைகள் முதல்
தாய்மையுறும் தாய்மார்கள்
அனைவருக்கும்
முழுநிறைவான போஷாக்குணவு

## ஜீவாகாரம்

யாழ். மருத்துவர் சங்கத்தால்
அங்கீகரிக்கப்பட்ட சமவிகித உணவு

# அண்ணா கோப்பி

யாழ்ப்பாணம் — இணுவில்
சுன்னாகம் — திருநெல்வேலி

சகல விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றன



வன்னியில் குடிகொண்டிருக்கும்
ஸ்ரீ வெங்கடேஸ்வரபதியே!
காட்சி தந்து அபயம் தந்திடுவாய்!!

**மங்கையர் மனதில் மங்காப்புகழ்பெற்ற ஜவுளி ஸ்தாபனம்**

பட்டு, பருத்தி பிடவைகளின் ஜவுளிக்கடல்

# சீமாட்டி

122, மின்சாரநிலைய வீதி,
[மேல்மாடி]
யாழ்ப்பாணம்



எங்கள் குலதெய்வம்... ஸ்ரீ வெங்கடேஸ்வரனே
எம்மவர் அல்லல்தீர்க்க அருள்பாலிப்பாய் பரந்தாமா !!
வர்த்தகர்கள் அனைவரும் பாடசாலை உபகரணங்களுக்கு
நாடிநிற்கும் வர்த்தக ஸ்தாபனம்

# சுரேகா புத்தக களஞ்சியம்

25, பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்.



நாடெல்லாம் நம்மவன் அருள்... அவனின்றி நாமில்லை...
அகிலம் போற்றும் ஸ்ரீவெங்கடேஸ்வரபதியின் அருள்நாடி நிற்போம்...
கண்ணைக்கவரும் வர்ண நகைகளின் எழில்கோலம்
காலத்தால் அழியாத 24 கரட் தங்கநகைகளுக்கு
நற்பெயர் பெற்ற ஸ்தாபனம்

# நதியா ஜுவல்லறி



02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மணிவாக்கு

உன் சொல்லுக்கேற்ப செயலையும் செயலுக்கு ஏற்ப சொல்லையும் அமைத்துக் கொள்.

— ஷேக்ஸ்பியர்

## நமது நோக்கு

### வாந்திபேதி அபாயம்

யாழ். குடாநாட்டில் வாந்திபேதி வேகமாகப் பரவி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நோயாற் பாதிக்கப்பட்டவர்கள் தினசரி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களைத் தனிமைப்படுத்திச் சிகிச்சை அளிப்பதற்காக, யாழ். போதனா வைத்தியசாலையில் தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவசிய மருந்து வகைகளை உடன் அனுப்பி வைக்குமாறு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையகத்திற்கு அவசரச் செய்தி அனுப்பியுள்ளார். சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இவற்றைப் பெற முயற்சி எடுத்துள்ளது.

நோயை மேலும் பரவவிடாமல் தடுப்பதற்குப் பொது மக்கள் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது அவசியம்.

தைதக அகதி முகாமில் இந்த நோயாற் பலர் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனைய அகதிமுகாம்களின் சுகாதாரச் சீர்கேடுகளை நீக்கத் தொண்டர் நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும்.

போதிய சுகாதாரச் சீரின்மையை அறிந்த சில வெளிநாட்டு நிறுவனங்கள், அகதி முகாம்களைப் புனரமைக்க முன்வந்தன. ஆனால் அதற்கான அத்தியாவசியப் பொருட்கள் வந்து சேருவதற்குத் தடைகளும், தாமதங்களும் ஏற்பட்டன என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சுகாதார விதிகளைப் பேணாத உணவகங்களால் விளையும் ஆபத்துக்களை உணர்ந்த யாழ். மாநகராட்சிச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர்சோதனைகளை நடாத்தியுள்ளார்கள்.

இதன் விளைவாகச் சில உணவகங்கள் மூடப்பட்டுள்ளன; சில எச்சரிக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சிப் பகுதியில் மாத்திரமல்ல, ஏனைய பகுதிகளிலும் இத்தகைய பரிசோதனைகளை நடாத்தி, நோய் பரவும் ஆபத்தைக் குறைக்க வேண்டியது அவசியமாகும்.

"பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்!" ஆனால், அந்தப் பத்தில் ஒன்று சுகாதார விதிகள் அல்ல என்பதைப் பொது மக்கள் உணர்ந்து 'கடைச் சாப்பாட்டுக்களை' வாங்காதிருக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் ஊடாகச் சுகாதார விதிகளைச் சமூகத்திற்குப் பரப்ப வேண்டும்!

★ யாழ் பல்கலைக்கழகத்தில்

# சித்த மருத்துவத் துறையை தனி நிறுவகமாக மாற்றுக

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பாரம்பரியங்களுள் ஒன்று தமிழ் மருத்துவம் அல்லது சித்த மருத்துவமாகும். ஒரு பல்கலைக்கழகமானது, தனது பிரதேசத்தின் அரசியற் கல்வி, சமூகப் பொருளாதாரக் கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு ஸ்தாபனமாக இருப்பதுடன், அந்தப் பிரதேசத்தின் மனித வளத்தையும், புத்திஜீவிகளையும் உருவாக்கும் ஓர் உற்பத்தி நிலையமுமாகும் என யாழ். சித்த மருத்துவத்துறை மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை மேலும் கூறுகையில்; சித்த மருத்துவம் தனது உண்மையான வளர்ச்சியைப் பெறுவதற்குப் பல காரணிகள் உண்டு. பல்கலைக்கழகம் மற்றும் சமுதாயக் கண்ணோட்டத்தில் பழைய நிலையைச் சித்த மருத்துவர்கள் கடைப்பிடிக்கிறார்களில்லை என்ற போக்குக் காணப்படுகிறது. சித்த மருத்துவம் இயற்கை மருத்துவமாகும். மருத்துவத்திற்கு முக்கியமாகத் தேவைப்படுவது மருந்துகள் தான். இந்த மருந்துகளைத் தரமாக உற்பத்தி செய்து வழங்கினால் தான் இந்த மருத்துவம் முன்னேற்றம் அடையும்.

இந்த மருத்துவ வளர்ச்சிக்கு ஒரு நிறுவனம் அமைவதுபோல், ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய போதனா வைத்தியசாலை, மருந்து தயாரிப்பு ஔடதசாலை, ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வசதிகள் மற்றும் முன்னேற்றம் அடைந்த துறையினரின் ஆலோசனை ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன.

தென்னிலங்கையில் சுதேச வைத்தியத்துறை அமோக வளர்ச்சி அடைந்துள்ளது. அங்குள்ள ரீதியில் எமது மண்ணில் எதுவும் உருவாக முடியாத வகையில் தடைகளைப் போடுபவர்கள். நாம் எந்தச் சமயத்திலும் பகடைக்காய்களாக இல்லாமல், ஏமாந்தவர்களாகச் சரித்திரத்தில் இடம் பெறாமல், சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சித்த மருத்துவம் வளர ஒரு வழியை உருவாக்கப் பேரவை எடுத்த முயற்சி பாராட்டுதலுக்கு உரியது. எமது பாரம்பரியம் எம்மாலேதான் காப்பாற்றிப் பேணப்படவேண்டியது எமது மண்ணுக்கு நாம் செய்யும் கடமையாகும். சித்த மருத்துவம் உயர்நிலை அடைய எல்லோரும் தமது பங்களிப்பை ஏகோபித்து வழங்குவதுதான் இந்தக் காலகட்டத்தின் முக்கியம் என்பதை யாரும் மறுக்கக்கூடிய ஒரு விடயமல்ல. தமிழ் மண்ணில் தமிழ் மருத்துவம் வளரத் தமிழராகிய நாம் உறுதியுடன் செயற்படுவோம்.

இராணுவத்தினரின் மிக மோசமான கெடுபிடிகள் மத்தியிலும், சித்த மருத்துவத் துறை மாணவர் மன்றப் பிரதிநிதிகளின் விஜயத்தின்போது அவர்களது கோரிக்கைகளுக்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், கொழும்பில் இயங்கும் சித்த யுனானி ஆயுர்வேதப் பட்டதாரிகளைக் கொண்ட சுதேச வைத்திய சங்கமும் தமது ஏகோபித்த ஆதரவை நல்கி, மாணவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தனர். மாணவர்களின் கோரிக்கைகள் வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள் எழுதி அந்தப் பல்கலைக்கழகங்களில் ஒட்டப்பட்டன. அது மட்டுமன்றி உயர் கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் ஆகியோருக்கு உடனடியாக இப்பிரச்சினையைத் தீர்க்குமாறு தந்தியும், கடிதமும் அனுப்பப்பட்டன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

கொண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தில் இன்று காலை இரதோற்சவம் நடைபெறும். மாலை நிகழ்ச்சிகளாக வேய்ங்குழலிசை, ஒலி வாத்திய இசை, வில்லிசை போன்ற கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். (சி)

* * *

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இலங்கை வங்கி ஊழியர்களின் ஆதரவில் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டு அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான 6 பேர் கொண்ட 6 சுற்று மென்பந்து கிரிக்கெட்போட்டியொன்று இன்று சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. -155

0 0 0

(யாழ்ப்பாணம்)

பெரிய குருநாதர் சிவ கின்னத்தம்பி சுவாமிகளின் வருடாந்த சமாதி குருபூசை இன்று சனிக்கிழமையும் அவரின்பிரதம சீடரான முருகுப்பிள்ளை மௌனகுரு சுவாமிகளின் வருடாந்த சமாதி குருபூசை 30ம் திகதி வியாழக்கிழமையும் மறவன்புலோ சுத்த சிவ சமரச சன்மார்க்க சாது சங்க சமாதி திருபீடத்தில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி விசேட அபிஷேகங்களும் பஜனை பூசைகளும் மகேசுர பூசையும் நடைபெறும். -165-சி

## இராசி பலன்

25-09-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 9)

தசமி பி. ப 5-35 வரை உத்தராடம் மு. இ. 9-03வரை சித்தயோகம் இராகுகாலம் காலை 9-02 முதல் 10 32 வரை சுபநேரம் மாலை 3-02 முதல் 4-32 வரை

மேடம்; குடும்பத்தில் சகஜ நன்மை கருத்தொற்றுமை பணவரவு.

இடபம்: தொழில் மந்தம், இனசனப்பகை, பொறுமை இழப்பு

மிதுனம்: விக்லங்கம், மனக்கிலேசம், தொழில் கஷ்டம்.

கடகம்: பணலாபம், தொழில் ஏற்றம், காரியசித்தி

சிங்கம்: மனத்திருப்தி சுபகாரியம், இனிய உரையாடல்.

கன்னி: பிறர் அறிவுரை, தொழில் முதலீடு, தாயார் பாசம்.

துலாம்: நண்பர் விரோதம், இடம்பெயர்வு, மனைவி துயர்.

விருச்சிகம், பெண்சகாயம், வருவாய் மேன்மை, பணம்.

தனுசு: ஆணவபேச்சு, பழிதீர்த்தல், குடும்பவேற்றுமை.

மகரம்: தொழில் லாபம், விருந்தினர் வருகை, மனச் சந்தோசம்.

கும்பம்- புத்திரர்மாற்றம், உறவால் கேடு, அலைச்சல்.

மீனம்: புதியஸ்தானம், தான தர்மம், பொதுப்பணி பாராட்டு.

— ஜோஸ்யர்.

மரணவீட்டில்

## உணவு அருந்தியவர்களில் 8பேருக்கு வாந்திபேதிநோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் வீதியில் நடந்த மரண வீட்டில் உணவு அருந்தியவர்களில் ஒருவருக்கு வயிற்றோட்ட நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டன.

பரிசோதனையின் பின் இந்த வீட்டில் உணவருந்திய எட்டுப் பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் யாழ் மாநகரசபைகிமன்ற சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு வாந்திபேதி நோய் (கொலரா) அறிகுறி இருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த மரண வீட்டில் உணவு அருந்திய வேறு எவருக்காவது வயிற்றோட்டம் காணப்பட்டால் உடனடியாக வைத்திய அதிகாரியைத் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்படுகிறார்கள். 162

யாழ். மாவட்ட

## தடகள விளையாட்டுப் போட்டி ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படவுள்ள 3-வது தடகளவிளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே திட்டமிட்டபடி பூர்த்தியாகி உள்ளது.

மாவட்டத்திலுள்ள அனைத்து வலயங்களுக்குமான முதற்கட்ட போட்டிகள் முடிவடைந்த பின்னர் மாவட்ட மட்டத்திலான இறுதிப் போட்டிகள் மூன்று நாட்களைக் கொண்ட விழாவாக நடைபெறும் ஒக்டோபர் 29-ம், 30-ம், 31-ம் திகதிகளில் நடைபெறவுள்ள விழாவில் கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும். இதுதவிர வலயங்களில் முதல் நான்கு இடங்களையும் பெற்ற வீரவீராங்கனைகளுக்கான தடகள போட்டிகளும் நடைபெறும்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய வலி மேற்கு வலயத்தின் போட்டிகள் அக்டோபர் 8-ம், 9-ம் திகதிகளிலும் பளை, சாவகச்சேரி பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி வலய போட்டிகள் 9-ம், 10-ம் திகதிகளிலும் வேலணை ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய பிரிவுகளின் தீவகவலய போட்டிகள் 13-ம், 14-ம் திகதிகளிலும் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரிவுகளின் வடமராட்சி வலைய போட்டிகள் 16-ம், 17-ம் திகதிகளிலும் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரிவுகளின் வலிகிழக்கு போட்டிகள் 15-ம், 16-ம் திகதிகளிலும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்ப முடிவு திகதி 30-09-93 ஆகும். விண்ணப்ப படிவங்களை அவ் அவ் வட்டப்பிரிவு விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் பெற்று உரிய திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்கப் படுகின்றனர். (சி)

## கண்டனம்

(பருத்தித்துறை)

இராணுவ அனர்த்தங்களினால் தொழில்களை இழந்துள்ள சீமெந்து கட்டிட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டமைக்கு வடமராட்சியிலுள்ள சீமெந்து கட்டிட தொழிலாளர்கள் சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிவாரணங்களைத் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆகியோரை இச் சங்கங்கள் கேட்டுள்ளன. (52)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கல்வித்திணைக்களம் மற்றும் பாடசாலைகளில் உள்ள அலுவலக ஊழியர்கள், காவலாளிகள், தொழிலாளிகள், ஆய்வுகூட நூலக உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 27ம் திகதி முதல் இடம்பெறவுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ். கல்வித்திணைக்களத்தில் வைத்து நடாத்தப்படவுள்ளது. இதற்காக வடக்கு-கிழக்கு மாகாண சபை உத்தியோகத்தர் செல்வி திலகவதி பெரியதம்பி யாழ். வந்து ஏற்பாடுகளை மேற்கொள்ளார். (157-சி)

வைத்தியசாலைகளில்

## கட்டாக்காலிகள் தொல்லை தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்குள் அதிகரித்து வரும் கட்டாக்காலி மிருகங்களின் தொல்லையை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு தொற்றுநோயியல் நிபுணரும், பதில் பணிப்பாளருமான திரு. கே. சி. சிவபாதம் தெரிவித்தார்.

நீண்ட காலமாக கட்டாக்காலி மிருகங்களால் வைத்தியசாலை வளவுகள் சுகாதாரச் சீர்கேடடைந்து காணப்படுவதாகவும், இதனால் நோயாளரும், ஊழியர்களும் பல தொல்லைகளை அனுபவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (157-சு-சி

நாடு செழிக்க நன்னீர் பெறுவோம்

தேரேறி உலம் வருவாய்
ஸ்ரீ வெங்கடேஸ்வரனே அருள் பாலிப்பாய்!
★ சகலவிதமான உணவுப்பொருட்கள்
★ பாலுணவுப் பொருட்கள்
★ அத்தியாவசியப் பொருட்கள்
சகல தமிழ் தினசரிகளின் வெளியீடுகள்
— வாசகர் வட்ட சேவை —
சிவன் ஸ்ரோர்ஸ்
வளாகச் சந்தி,
திருநெல்வேலி.

அவனின்றி ஏதுமில்லை. அவன் அருள் பாலிப்பான்
வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வரபதியே அருள் தருவாய்!
★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகர மான நிகழ்ச்சிகளை வீடியோவில் படமாக்கவும்
★ நெஞ்சில் நிலைக்கும் பழைய புதிய சினிமாப் பாடல்களை உங்கள் எண்ணம்போல் ஓடியோ ஒலிப்பதிவு செய்யவும்
★ வீடியோ படக்காட்சிகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும் —
எம்மவர் நினைவில் நிழலாடும் நிறுவனம்
சுப்பர்ஸோ
வீடியோ ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

மரயமாய் கருணை சொரிந்து
பக்தர்களை காத்திடும் வெங்கடேசா
சரணம் காத்திடுவாய் அப்பனே
துரித சேவையில்
நமர் சில,
கலர் வெள்ளைப் படங்கள்
என்லாஜ்மென்ட் படங்களுக்கும்
தரன் ஸ்ருடியோ
189, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்



யாழ்ப்பா...

# ஸ்ரீவெங்கடேச வரதரா...

# இரதோற்சவ சிற...

எல்லாம்வல்ல எம்பெருமான் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமானின் ஆலயத்தின் மகிமையும் சிறப்பும் போற்றுதற்குரியது.

... டத்துடன் முடிசூட்டப்பட்ட குணபூஷண சிங்கையாரி தமது காலத்தில் நெசவுத் தொழிலை விருத்திசெய்யும் நோக்குடன் ஆந்திராவில் இருந்தும் காஞ்சிபுரத்திலிருந்தும் பதும ...

... கிரகத்தை வைத்து வணங்கி வந்தாரென்றும் அதிலிருந்தே இக் கோவில் உற்பத்தியானதென்றும் ஒரு ஐதீகமிருக்கின்றது. அந்த ஆதிகாலந் தொட்டு இருக்கின்ற சிறிய விக ...

விஷேசபூசை... வருகின்றன.

விஷ்ணு ஆ... பகுதி வைகா... படியும் மற்ற... திர முறைப்ப...

## "அல்லல் உறும் அடியார்கள் வி...


## அறுத்திடும் அச்சுதனை வேண்டிடுவோம்"

அடியார்களுக்கு அருள் பாலிக்கும் வேங்கடேசப் பெருமான் வண்ணை நகரில் கோயில் கொண்டுள்ளார். ஈழவள நாட்டில் அமைந்துள்ள வைஷ்ணவ ஆலயங்களுள் முதன்மையும் பெருமையும் ஒருங்கே அமைந்ததாக உள்ள ஸ்ரீவண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் யாழ். நகரின் மத்தியில் வண்ணார்பண்ணையில் அமைந்துள்ளது.

இத் திருக்கோவில் மூர்த்தி, தலம் தீர்த்தங்களால் மகிமை பொருந்தியது. இங்கே வரதராஜ சுவாமி அருள்மிகு ஸ்ரீதேவி — பூதேவி சமேத வீற்றிருந்து அருள்பாலிப்பது சிறப்பம்சமாகும்.

கி. பி. 1347ம் ஆண்டில் செகராஜசேகரன் என்ற பட்டத்துடன் ... சாலிகளைக் கொண்டுவந்து வண்ணார்பண்ணையில் குடியமர்த்தினான். இவர்கள் தமது வைணவ சமய அனுட்டானங்களை மேற்கொள்ளும் பொருட்டே இவ்வாலயத்தை கட்டினார்கள் என்ற ஒரு ஐதீகம் உண்டு.

இக் கோவிலின் ஸ்தல விருட்சம் பலா மரமாகும். கோவிலின் உள்வீதியில் மகாலஷ்சுமியின் பிரகாரத்துக்கு மருங்கே அமைந்துள்ள இவ் விருட்சம் காலாவதியாகி அதன் நடுமரம் அழிந்து போகவே சுற்றிவர அதன் அடிமரம் காணப்படுகிறது. அடியிலிருந்து பக்கத்தில் கிளைகளும் தோன்றுகின்றன. கோயில் கட்டுமுன்பு அச்சாலியத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் அப் பலாமரத்தடியில் வேங்கடேசப் பெருமாள் விக்கிரகத்திற்குக் கொடியேற்றத் திருவிழாக் காலத்தில் தீர்த்த திருவிழாவென்றும், விடாபதி திருவிழா வொன்றும்



...கள் நை... இக் கோவில் ... முறைப்படி கி... கும் கோவிலா... ஒரு கும்பாபி... 1952 ஆகிய இ... சம்புரோசஷ... கும்பாபிஷே... பெற்றிருக்கின்...

1907ம் ஆண்... பட்டு இதுவ... தில் இருந்துவ... தடைந்து வி... 1960ம் ஆண்டு... திருமணிக்கப்...

(6-ம் பக்க...

மலர் ...
க. ரா...

ஓம் சாயி ஜெயராம் ............
ஓம் சாயி ஜெ...
பரந்தாமன் அருள் தேடி
கருணைக்கடலாய் கடாச்சம்புரியவ...
★ சகல விதமான ஆங்கில மருந்துவகைகு...
★ கால்நடை மருந்துவகைக...
பகவான்
221, நாவலர் வீதி,

கேட்கும் அடியார்க்கு கேட்கும் வரம் தரும்
வண்ணை ஸ்ரீவெங்கடேஸ்வர பெருமானே எம்மவரை
காத்திடுவாய்
சுவைகுன்று ஐஸ்கிறீம், சர்பத் வகைகளுக்கு
15 வருடகால நன்மதிப்பு பெற்ற ஒரே நிறுவனம்
லிங்கம் கூல்பார்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

ணம் — வண்ணை

ஜப் பெருமாள் தேவஸ்தான

# ப்புமலர் (25-09-93)

டைபெற்ற
னில் ஒரு
முறைப்
பஞ்சராத்
கிகை

னே

றுகின்றன.
வைகானச
வ் நடக்
. 1884ல்
ம் 1941,
ண்டுகளில்
ஷ்டபந்தன
ம் நடை
.

கட்டப்
உபயோகத்
தேர் பழு
படியால்
திய தேர்
து. இத்
ாக்க)

மப்பு
சாமி

## பக்தனுக்கு அருள்பாலித்தவன் வெங்கடேஸ்வர பெருமாள்!!

கிருத யுகத்தில் ஸ்ரீ நரசிம்மராக அவதரித்தார்;
திரேதா யுகத்தில் ஸ்ரீ ராமபிரானாக அவதரித்தார்,
துவாபரயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்தார்,
கலியுகத்தில் ஸ்ரீ வேங்கடாசலபதியாக திகழ்கின்றார்.

அன்பினால் கண்டுண்டு விட்டால் மனம் மனம் எதை வேண்டுமானாலும், செய்திட துணிந்துவிடும். மனிதனால் எதைச் செய்துவிட முடியுமோ அத்தனையையும் பரந்தாமன் செய்துவிடுவான். பக்தரின் அன்புக்கு கட்டுப்பட்ட பகவான்களுமா மாறிவிட தயங்கவில்லை.

காலதூஷகன் என்பவன் ஓர் கள்ளர்கூட்டத்தின் தலைவன், ஆனால் அவன் ஸ்ரீநாரணனன் மீது அளப்பரிய பக்திகொண்டவன். அவன் களவாடுதவற்றை தான் திருடுவதில் சரிபாதியை பகவானுக்கு சேர்த்திடுவதாக வேண்டினான். அவ்வாறே எதைத் திருடினாலும் அதில் சரிபாதியைப் பெருமாளின் உண்டியலில் சேர்த்திடுவான்.

ஒருநாள் அரசனின் அரண்மனையில் திருடுவதற்கு திட்டமிட்டு, தனது சகாக்களை அழைத்துக்கொண்டு அரண்மனைக்குள் திருடுவதற்கு புகுந்தான். காவலர்கள் விழித்திருந்து காலதூஷகனின் சகாக்களைப் பிடித்து விட்டனர். காலதூஷகன் தப்பித்து விடுகிறான்; அரசன் அறிந்து, பரந்தாமனை நினைவு ஊழியர்கள் அவனுக்கு நிலைமை அவனுத்து. "கோவிந்தா வைகுந்தத்தில் சகாக்களிடமிருந்து வாசா! என்றுகிலும் காலதூஷகனது இருப்பிட திசை அறிந்து அங்கு வந்து விடுகின்றார்கள். (4ம்- பக்கம் பார்க்க)

### அடிதொழுதோம் பெருமாளே அருள்வாய் நீயே

வெவ்வினையை வேரறுக்கும் பரந்தாமா
வேய்க்குழலின் கீதமிசை வேத நாதா
எவ்வெவரும் வேண்டுவதை ஈயும் பாதா
ஏந்திழையர் சிதேவி பூதேவி சூழ
பவ்வியமாய்த் தேரேறிப் பவனி வரும்
பதிவண்ணை வாழுஸ்ரீ வெங்க டேசா
அவ்வியந்தீர்த் தின்பமருள் வரத ராஜா
அடிதொழுதோம் பெருமாளே அருளுவாயே

நாயன்மார்கட்டு இ. குகதாசன்.

கருணை மூர்த்தியே காலத்தா
அவதாரமெடுத்த பெருமாளே....
தேரேறி வலம்வந்து காட்சிதந்திடுவாய்.



தரமான
இமிரேஷன்
கோல்ட்
கவறிங்நகைகள்
மணப்பெண்
ஜோடனைநகைகள்

லேஸ் நூல்வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் உள்நாட்டு வெளிநாட்டு அழகுசாதனப் பொருட்கள் சில்வர் பாத்திரங்கள் வியாபாரிகள் மொத்தமாக பெற்றுக்கொள்ள ளாம்.

ஜெயா அழகுசாதன மாளிகை
177/A மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

தேரேறிவந்து கருணைக்கடல் பொழிவாய்
ஸ்ரீவெங்கடேஸ்வரனே காட்சி தருவாய்.
பரந்தாமனே அப்பனே அருள்பாலித்திடுவாய். சரணம்

யாழ். புகைப்படத்துறையில்
புதிய அத்தியாயம்!

ஸ்ருடியோ
ஒழுங்கமைப்பில்
உங்கள்
மங்கள!
வைபவங்களை
கண்ணைக்கவரும்
வர்ணப்
படங்களாக
பெற்றுக்கொள்ள

★ இது ஓர் சிறப்புச்சேவை ★

கே. எஸ். ஆர்.
போட்டோஸ்
766, கே. கே. எஸ் வீதி,
தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

ஓம் சயி ஜெயராம்..........

ாடியவர்க்கெல்லாம்
ன ஸ்ரீ வெங்கடேஸ்வரபதியே
க்கும்
நக்கும் நியாய விலை ஸ்தாபனம்

மருந்தகம் ★ ★

யாழ்ப்பாணம்.

திருப்பதி வாழ் வெங்கடேஸ்வரனே. எம்மவர்க்கும் இங்கு
அருள்பாலிப்பவனே அப்பனே... துயர்பல களைந்திடுவாய். கருணைக்கடலே

ஆங்கில மருந்து வகைகளின் களஞ்சியம்

எஸ்ரி மெடிக்கல்ஸ்

490, ஆஸ்பத்திரி வீதி
(வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்

தேரேறி வலம்வரும் ஸ்ரீ வெங்கடேஸ்வரா உன்பாதம் தொழுவோம் எம் துன்பம் போக்கிடுவாய்
சகல பாடசாலை மாணவர்களுக்கும் தேவையான அப்பியாச கொப்பிகள்
அலுவலக உபகரணங்கள், எழுதுகருவிகள் அச்சக காகிதாதிகள் மற்றும்
உபகரணங்களின் மொத்த சில்லறை வியாபாரிகள்

மிக் கைத்தொழில் நிறுவனம்

(நடராசா வர்த்தக மையம்)

MIK INDUSTRIES (NADARAJAH COMPOUND)

26|26/1 சிவன் புதியவீதி திருநெல்வேலி - யாழ்ப்பாணம்

## பதம்சூடும் எமைக் காப்பாய் மாயக் கிருஷ்ணா!

ராகம்: வசந்தா தாளம்: ஆதி

பல்லவி

ரதம்தன்னில் வருகின்ற மாயக்கண்ணா — உன்தன்
பதம்சூடும் எமைக்காப்பாய் மாயக்கிருஷ்ணா — கோல
(ரத......)

அனுபல்லவி

மான்கண்ணாள் ஸ்ரீதேவி ஒருபக்கத்தில் — மைக்
மீன்கண்ணாள் பூதேவி மறுபாகத்தில் — சூழ
(ரத......)

சரணம்

நிதம்வண்ணைப் பதிதன்னை வலம்செய்கின்றோம் - எமை
வதம்செய்யும் துயர்தன்னை வதம்செய்யையா - பல
விதமாயுன் புகழ்போற்றித் துதிசெய்கின்றோம் ஆளும்
விதமாயுன் அருள்சேர்த்துத் துணைசெய்யையா - அன்பு
(ரத......)

— "சரவணன்",

## அல்லல் உறும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேரின் அடித்தளத்தில் இராமாயணமும், மகாபாரதமும், பகவதம் முதலிய நூல்களிலுள்ள வரலாறுகள் சிறப்பாக செதுக்கப்பட்டு பக்தி பரவசமூட்டுவனவாக அமைந்துள்ளமை காணுதற்குரியது.

இன்று 25ந் திகதி ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேர் திருவிழாவாகும். அல்லல்படும் அடியார்கள் அனைவரினதும் துயர்தீர ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீவேங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் தேரேறி வீதிஉலா வரும் காட்சியினை அடியார்கள் யாபேரும் கண்டுகளித்து எம்பெருமானின் அருள்பேறு பெறுவோமாக.

வெம் பகையால் அல்லல் உறும் அடியார் துயர் களையும் அச்சுதனை வேண்டுவோம்.

— சிவா கதிரமலை

## பக்தனுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்த வாக்கை மீறியிருக்கின்றேனா. என்னைக் காட்டிக்கொடுத்திடுவாயா என இறைஞ்சினான். தன்னை நம்பியிருக்கும் பக்தனை எண்ணி காலதூஷதனாகமாறிவிட்டான் நாராயணன். அரண்மனை சென்றார். அரசவைக்கு "பெருமாள்" என்று தெரியாமல் சங்கிலியால் இழுத்துச் சென்றனர் காவலர்.

"இல்லாதவர்க்கு கொடுத்திட இருப்போரிடம் கேட்டால் கொடுப்பதில்லை. ஆனால் திருடிச்சென்று கொடுத்துதவுகிறேன் தவறு என்று எண்ணினால் தண்டிக்கலாம்" என்று விநயமாகப் பேசியதைக் கேட்டு அரசன் சற்று ஆணுக்குற்றான்.

சாதுர்யமாகவும் விநயமாகவும் பேசும் இவர் சாதாரண கள்வனல்ல" என்று உணர்ந்தான் அரசன்.

"யார் நீ? என்று வினவ, பரந்தாமனும் தனது சுயரூபத்தைக் காட்டி, காட்சியளித்து காலதூஷனை அரசனின் ஆப்த நண்பனாக்கி விடுகிறான்.

கள்வனாக சேதிட தானே கள்வனாகிய எம் பெருமாள் வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமானை எப்படி வர்ணிப்பது. சொல்லில் அடங்காத அவ்வைபவமான "பெருமாளின்" திருநாமம், "கள்வர் பிரான்" அவர் தேரேறி வருகிறான். நலம் பல தருவான்.

ஐயா. சச்சிதானந்தன்

இரதோற்சவ விழா சிறக்க வாழ்த்துகின்றோம்

# செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

## Selliah Sivapathalingam

Gem & Jewels Merchant

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

191 H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வேண்டுவோர்க்கு வேண்டியதை அருளும்
ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாளே அருள்தருவாய்

# துர்க்கா ஆபரண மாளிகை

தங்கப்பவுண் நகை மாளிகை

71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் தங்க நகைகளை உற்பத்தி செய்பவர்கள்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

THURKKA JEWELLERS
DIAMOND & JEWEL MERCHANTS
71, Kannathiddy, Kasthuriyar Road, Jaffna.

எல்லையில்லா கருணைக்கடலே எம்மவர் குறைதீர்த்திடுவாய்
வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வரனே காத்திடுவாய் சரணம்!

வீடியோ படப்பிடிப்பிலும் புகைப்படப்பிடிப்பிலும்
மக்கள் ஆதரவுபெற்ற ஒரே நிறுவனம்



BLOSSOMS

# மலரும் மலர்கள்

[வீடியோ சேவை]

82, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

வண்ணையில் தேரேறி வலம் வந்து பக்தர்களை காப்பவனே ....
பரந்தாமா ... கோவிந்தா ... வைகுந்தா ... ஜெயபேரிகை முழங்கிடுவோம்....

பெண்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும்
தங்க நகைகளின் தங்கச் சுரங்கம்!
தங்க நகை உலகின் நம்பிக்கை நட்சத்திரம்!
உன்னத கலைநயம் மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு தோற்றத்திற்கு
நவீன மோஸ்தர்களில் தரம்குன்றா தங்கப் பவுண் நகைகளை செய்து பெற்றிட வாரீர்!

# சிறி அமலா ஜுவலர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Sree AMALA Jewellers

## கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தான

# இரதோற்சவ சிறப்பு இதழ் (25-09-1993)

வைஷ்ணவ சம்பிரதாயத்தைக் கடைப்பிடிப்பதற்கும் அதன் சித்தாந்தத்தை மேலோங்கச் செய்வதற்கும் இலங்கையில் இருக்கின்ற விஷ்ணு ஆலயங்களில் கோண்டாவில் கிழக்கில் அருள் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானமும் ஒன்றாகும்.

னம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், தரிசன மண்டபம், அநந்தசயன ரங்கநாதர் ஆலயம், மகாலக்சுமி ஆலயம், ஆஞ்சநேயர் ஆலயம், நவக்கிரக மண்டபம் ஆகியவை அமையப்பெற்று ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக நின்ற கோலவரதராஜமூர்த்தி வடிவில் அருளுகின்ற இவ்வால

றவை வருடாவருடம் கொண்டாடப்படுவதாயும்வைஷ்ணவ சம்பிரதாயத்தை வளர்க்கும் ஓர் ஆலயமாகவும் இது திகழ்கிறது. இங்கு மக்கள் வருகை தந்து தீராத நோய்கள் எல்லாம் தீர்த்த வண்ணம் செல்கின்றனர்.

மேலும் கடந்த சில வருடங்களாகத் தடைப்பட்டிருந்த இவ்வாலயத் திருப்பணி வேலை

## கீதை சொன்ன கண்ணன் இன்று தேரில் பவனி வருகிறான்

இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே மூன்று அடிகளை மட்டும் கொண்டிருந்த இவ்விடத்து அன்பர் ஒருவர் அச்செழு என்னும் இடத்திற்குச் சென்றபொழுது அங்கிருந்த ஒரு கழிக்கருகில் அசரீரி கேட்டபொழுது கண்டெடுத்த கற்சிலை ஒன்றை தன்னுடனேயே கொண்டுவந்து இங்கிருக்கிற ஒரு அரச மரத்தின் கீழ்வைத்து வழிபட்டதாயும் காலகாலத்தில் மக்கள் வழிபாட்டிற்கு வரத்தொடங்கியதாயும் பின் ஓலையால் வேயப்பட்ட ஆலயமாகவும் தொடர்ந்து கல்லால் கட்டி ஓட்டினால் வேயப்பட்ட ஒரு மடாலயமாக இருந்ததாகவும் ஆலயத்திற்குத் தெற்குப்புறமாக ஒரு வேப்பமரம் நின்றதாகவும் அதன் அடியில் பாம்புகள் குடிகொண்டதாகவும் மக்கள் அவற்றுக்குப்பாலூற்றும் வழங்கி நாக வணக்கஞ்செலுத்தியதாயும் உள்ள செய்திகளே காலவழிச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

காலஞ் செல்லச் செல்ல மக்கள் வல்லிபுரம் என்ற திருநாமமிட்டு வழிபட்டனர். அந்த ஆயிரநாமனை எப்பெயர் இட்டு அழைத்தாலும் அப்படியே வருபவனுதலால் மக்கள் மெய்யன்புடன் வழிபட்டு வந்தனர். ஆலயத்தை உருவாக்குவதற்கு மூலகர்த்தாவாக இருந்த அவ்வன்பரின் வழித்தோன்றலின் ஆலயமாக இருந்த இவ்வாலயம் 1979ல் இருந்து பொதுமையாக்கப்பட்டு அறங்காவற்குழு அமைக்கப்பட்டு பாலஸ்தாபனமும் செய்யப்பட்டது. இவ்வூர் மக்களின தளரா உறுதியும் தளராத முயற்சியும் மேலான பக்தியும் காலஞ்சென்ற அமரர் உயர்திரு சீதாராம சாஸ்திரிகள் அவர்களின் ஆசியும் இறைவனின் பெருங்கருணையும் ஸ்ரீவல்லிபுரநாதர் எனப் பெயரிடப்பட்டு 1981 இல் மகாகும்பாபிஷேகம் செய்ய அருள் கூட்டியது.


6-வது மண்டலாபிஷேக தினத்தன்று நாதஸ்வர இசைக்கு நாகமொன்று படமெடுத்து ஆடியதும் பின் அது கருவறைக்குள் மறைந்த சம்பவமும் மக்களால் இன்றும் நினைவுபடுத்துகிற விடயமாக உள்ளது. மேலும் இக் கும்பாபிஷேகத்திற்கும் பால் தர மறுத்த குடிமகனவர் ஒருவரின் பசு தன் எஜமானுக்கே பால் தர மறுத்தமையால் அவர் தொடர்ந்து ஆலயத்திற்கு இன்றும் பால் வழங்கிவரும் விடயம் எல்லோரும் அறிந்ததே.

மூர்த்திதலம் தீர்த்தம்முறையாக அமையப்பெற்ற இவ்வாலயத்தில் கருவறை, விமா

பத்தில் 1983ம் ஆண்டு கலியுகவரதன் வேங்கடாசலபதி அவதார நாளான புரட்டாதித் திங்கள் திருவோணத்தை

கல் தற்பொழுது நிறுத் திதாக இடம்பெற்று, சுற்றுக் கொட்டகை அமைக்கும்

(8-ஆம் பக்கம் பார்க்க



ட்சமாகக் வைத்து மகோற்சவம் இடம்பெற்றது. மேலும் அவ்வருடமேயே சித்திரத்தேர் பவனி வந்தமை இவ்வூர் மக்களின் விடாமுயற்சியும் இறைவனின் பேரருளும் என்றுமே கூற வேண்டும்.

இங்கு புதுவருடப் பிறப்பு தசானதார தினங்கள் குறிப்பாக கிருஷ்ண ஜெயந்தியும் உறியடி உற்சவமும், ஆழ்வார் உற்சவங்கள், 10 நாட்கள் கொண்ட மகோற்சவம், ஏகாதசி உற்சவங்கள், திருப்பாவை 30 நாட்கள் போன்

### பாராட்டுதலும் கௌரவித்தலும்

யாழ். பல்கலைக்கழகம் நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த வையநேயச் செல்வன் எஸ். கே. என். தவராஜா மேற்படி தேவஸ்தானத்தில் "ஸ்ரீ மகா பக்த விஜயம்" என்ற பொருள் பற்றித் தொடர்விரிவுரை நிகழ்த்தியமைக்கு திரு. ஆ. சுகாவிங்கத்தினால் தீர்த்தோற்சவம் அன்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் படவிருக்கிறார் என்பதனை அறியத் தருகிறோம்.

ஆலய பரிபாலனசபை

சிறப்புமலர்
ஏற்பாட்டாளர்
செ. சண்முகலிங்கம்

"அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே"
என்று பக்தர்கள் பரவசமடைகிறார்கள்.

தொடர்ந்து நாளை 26ம் திகதி காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும், 27ம் திகதி திருக்கல்யாண வைபவமும், 28ம் திகதி ஆஞ்சநேயர் பொங்கலுடனும் மகோற்சவம் இனிது நிறைவுறுகிறது.

"கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே"

தொகுப்பு:
எஸ். கே. என். தவராஜா
(யாழ். பல்கலைக் கழகம்)

இரதோற்சவ விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

விக்னு பார்மஸி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பாலா வீடியோ
கோண்டாவில் வடக்கு

முத்தொளி வீடியோ
கோண்டாவில் வடக்கு

சதிரை, பந்தல் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள
லிங்கம்ஸ்
ஆலடி வீதி கோண்டாவில் கிழக்கு

ரூபன் களஞ்சியம்
பல சரக்கு மாளிகை
திருநெல்வேலி சந்தை, (உப்புறம்)

றட்ணமேஸ் சவுண்ஸ்
கோண்டாவில்

க. செல்லப்பா
சற்குணம் குடும்பத்தினர்
ஸ்ரீ வாகீஸவரி சனசமூக நிலயம்
கோண்டாவில் வடக்கு

G. S. லிங்கநாதன் அன் கோ
இல. 13, 14, பெரிய கடை
யாழ்ப்பாணம்

லிங்கம் கூல் பார்
யாழ்ப்பாணம்

நிரு கல்வி நிலயம்
புகையிரத நிலய வீதி
கோண்டாவில் மேற்கு

இரசமணி களஞ்சியம்
பலசரக்கு வியாபாரம்
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு

